முருகப்பெருமான் துணை

**மகான் திருநீலகண்டர் நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**29.10.2023,** ஞாயிற்றுக்கிழமை

1. உலகநலம் காக்க வேண்டி
உயர் அவதாரம் புரிந்தநல்
வேலவனின் சூட்சும அரங்கனே
வினவிட உன்பெருமை கூறி
2. கூறியே சோபகிருது துலைதிங்கள்
குறைவிலா வியதிகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 12ம் நாள், 29.10.2023, ஞாயிற்றுக்கிழமை)
அறிவுரை ஆசிதனை திருநீலகண்டர் யானும்
அருளுவேன் உலகோர் நலம்பெற
3. நலம்தரும் ஞானபலம் தரும்
ஞானிகளின் சைவநெறி ஏற்று
வேலவா என வேண்டிவர
விடாது சன்மார்க்க வழியில்
4. வழியில் சரணாகதி கொண்டு
வகைபட ஞானிகள் பூசையோடு
அழியாமை தரும் குடிலமுது உண்டு
ஆற்றல்பட அன்னதான சேவை
5. சேவைதனை செய்து வருக
செப்பிடுவேன் ஞானபலமுடன்
அவனியில் தரும பலமும் கூடி
அறிவிப்பேன் வாழுகின்ற காலமே
6. காலமே ஞானிகள் ஸ்பரிசமும்
கந்தப் பெருமான் காட்சியும்
கோலமதாய் தயவும் கூடி
குறைவிலா ஞானவான்கள் ஆவர்

7. ஆவரே அரங்கன் தேடுகின்ற
ஆற்றல்மிக்க சக்திகளாக
அவனிமாற்றும் மகான்களாக
அனைத்திலும் தேறி நிற்பர்
8. நிற்கவே நல்சக்தி நிலை
நிலவுலகம் எங்கிலும் பரவ
அற்புதமான சமூக மாற்றமாக
அகிலத்திலும் நிகழ்வு கண்டு
9. கண்டுமே ஞானவான்களும்
கணக்காய் அரசியல் களம்
கண்டுமே ஞானத் தலைமையை
கலியினில் உருவாக்கி இனிதே
10. இனிதே உலகம் எங்கிலும்
ஏற்புடைய ஞான ஆட்சி
கனிவேலவன் தயவு கண்டிட
கலியினில் படைத்துமே சிறப்பர்
11. சிறப்பறிவு காட்டும் அரங்கனே
செப்பிட கலியினில் சிறந்தஞானி
மறுப்பின்றி ஏற்றுவர உலகே
மாற்றம் கண்டு அற்புதம்பெறும்

அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–